

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மே 05, 2022 | புரட்சி 21 | முழக்கம் 16 | விலை: ரூ.3.00


## நமக்கான அடையாளம் : ‘திராவிட மாடல்’

# கலை நிகழ்வு – கருத்துச் செறிவுடன் சென்னையில் முதல் மண்டல மாநாடு



***கழக செயல் வீரர் தோழர் பத்ரி நாராயணன் 18ஆவது நினைவு நாளையொட்டி, 30.04.2022 காலை 9 மணியளவில், பத்ரி நாராயணன் நினைவிடத்தில் கழகத்தின் சார்பில் நினைவு கூறல் நிகழ்வு நடைபெற்றது.***

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் பங்கேற்று பத்ரி நாராயணனின் சமரசம் இல்லாத இயக்கப் பணிகளை நினைவு கூர்ந்தனர். இறுதியில் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது.

அதன்பின் பத்ரி நாராயணன் படிப்பகம் அருகில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது.

திராவிட மாடல் முதல் மண்டல மாநாடு 30.04.2022 அன்று மாலை 5 மணியளவில் இராயப்பேட்டை வி.எம். தெரு பெரியார் படிப்பகம் அருகில், தென் சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் தொடங்கி நடைபெற்றது.

நிகழ்விற்கு, வட சென்னை மாவட்ட செயலாளர் இராஜி வரவேற்பு கூறினார். மயிலை சுகுமார், முனுசாமி, தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வின், தொடக்கத்தில் விரட்டு கலைக் குழுவின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பகுத்தறிவுப் பாடல்களை நாத்திகன் பாடினார்.

கழகத்தின் மண்டல மாநாடு பரப்புரைக்காக நிமிர்வோம் வெளியீடாக வெளிவந்துள்ள 15 புத்தகங்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, பேராசிரியர் சரஸ்வதி பெற்றுக் கொண்டார்.

கழகத் தோழர்களின் போராட்ட வழக்குகளை பெரிதும் சிரமேற்று தொடர்ந்து கவனித்தும், சில வழக்குகளில் முழு விடுதலையும் வாங்கித் தந்த வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, இளமாறன் ஆகியோருக்கு, மருத்துவர் எழிலன் பாராட்டி விருதை அளித்தார்.

தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன்,உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் திராவிட மாடல் குறித்து கருத்துரையாற்றினர்.

வடசென்னை மாவட்ட செயலாளர் இராஜி மாநாட்டில், இயக்க வளர்ச்சி நிதியாக ரூபாய் 5000 பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினார்.

19.4.2022 முதல் 28.4.2022 வரை ‘திராவிட மாடல் நமக்கான அடையாளம்’ என்ற முழக்கத்தை முன்வைத்து, மண்டல மாநாட்டை விளக்கி தெரு முனைக் கூட்டங்கள் சிறப்புடன் நடைபெற்றன.

இரா. உமாபதி, நாத்திகன், அய்யனார், எட்வின், தேன்மொழி, பிரகாஷ், தபசி. குமரன், அன்பு தனசேகரன், உதயா, ஜெயப்பிரகாஷ் ஆங்காங்கே கூட்டங்களில் பங்கேற்றுப் பேசினர். மக்களிடம் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டு உண்டியல் வழியாக நிதி உதவி வழங்கப்பட்டது. மக்களிடம் பேராதரவு காணப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற தெருமுனை கூட்ட பிரச்சாரத்திற்கு, மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், ஏசுகுமார், மயிலை சுகுமார், இராவணன், ப. அருண் குமார், இராஜேஷ், கன்னியப்பன், செந்தில், சேத்துப்பட்டு வேலு, எழிலரசன், சூரியா, குகன், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் இரண்யா, தேன்மொழி, பிரவீன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மண்டல மாநாட்டின் சிறப்பு

ஈரோடு செயலவை வகுத்த திட்டத்தின்படி முதல் மண்டல மாநாட்டை சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சிறப்புடன் நடத்தி முடித்தது.

முன்னதாக நாள் ஒன்றுக்கு 3 கூட்டங்கள் வீதம் 21 தெரு முனைக் கூட்டங்கள் சென்னை முழுதும் நடத்தப்பட்டன.

20க்கும் மேற்பட்ட கழக செயல்பாட்டாளர்கள், ஏழு நாட்கள் மாவட்ட செயலாளர் உமாபதி தலைமையில் முழுமையாகக் கடுமையாக உழைத்தனர்.

தோழர்களிடையே மிகுந்த உற்சாகத்தை உருவாக்கி ஒருங்கிணைப்பும் உறுதிப்படுத்தியது.

விரட்டு கலைக் குழுவைச் சார்ந்த 10 தோழர்கள், ஆனந்த் தலைமையில் மாநாட்டின் நோக்கங்களை விளக்கும் கலை நிகழ்வுகளையும் புதிய பாடல்களையும் தலைமைக் கழகத்தில் 3 நாட்கள் தங்கி, உருவாக்கி பயிற்சி எடுத்தனர்.

கலை நிகழ்ச்சிகளுக்கு இடையே கருத்துரையாளர்கள் ஆழமான கருத்துகளை முன் வைத்துப் பேசினர். கலைஞர்களுக்கு கழக சார்பில் ஆடைகள் போர்த்தி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கவுரவித்தார். நிகழ்வுகள் அனைத்தையும் மாவட்ட செயலாளர் இரா. உமாபதி ஒருங்கிணைத்தார்.

**– நமது செய்தியாளர்**

# விழுப்புரம், கோவையில் பரப்புரைப் பயணம்

***விழுப்புரம் – கோவை மாவட்டங்களில் “நமக்கான அடையாளம் திராவிட மாடல்” பரப்புரை – மக்கள் பேராதரவுடன் நடந்தது.***

**விழுப்புரம் :** விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நமக்கான அடையாளம் திராவிட மாடல் என்ற முழக்கத்தை முன்வைத்து மக்கள் சந்திப்பு பரப்புரை பயணம் 23-04-22 அன்று காலை11 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழக மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன் தலைமையில் கண்டமங்கலத்தில் தொடங்கியது. பாக்கம் கூட்ரோடு, வளவனூர், கோலியனூர், விழுப்புரம் இரயில் நிலையம் நிறைவாக பழைய பேருந்து நிலையத்தில் இரவு 9 அளவில் நிறைவு பெற்றது.

நிகழ்ச்சியில் ம.க.இ.க கலைக் குழுவின் இசை நிகழ்ச்சி பிரகாஷ், ராஜ் ஆகியோர் மக்களைக் கவரும் வகையில் பாடல்களை பாடி சிறப்பித்தனர்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் கொள்கை பரப்புரை செயலாளர் விஜி பகுத்தறிவு, பா. விஜய குமார், திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

தோழர்கள் அழகர், தமிழ், லிங்க மூர்த்தி ஆசிரியர் ரமணி, கிருஷ்ணராஜ், கவியரசன், விஷ்வா, மாதேஷ் பரப்புரைப் பயணத்தை வரவேற்று பலர் கலந்துகொண்டனர்.

25.04.22 இரண்டாம் நாள் விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் பரப்புரை பயணம் செஞ்சி இந்தியன் வங்கி அருகில் திராவிடர் விடுதலைக் கழக விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார் சாக்ரட்டீஸ் தலைமையில் காலை 11 மணியளவில் நடபெற்றது. பேராசிரியர் நந்தகுமார்

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## மருத்துவக் கல்லூரியில் ‘சமஸ்கிருத துதி’ ஏன்?

மருத்துவக் கல்லூரிக்கு மனு போடுவதற்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நடைமுறை, சென்னை மாகாணத்தில் நிலவியது. நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் பனகல் அரசர் முதல்வராக இருந்தபோதுதான் அது ஒழிக்கப்பட்டது.

மீண்டும் சமஸ்கிருதப் பண்பாட்டை மருத்துவத் துறையில் திணிக்க ஒன்றிய ஆட்சியின் கட்டுப்பாட்டில் செயல்படும் தேசிய மருத்துவ ஆணையம் தொடங்கியிருக்கிறது. மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், பத்திரப் பதிவு அமைச்சர் மூர்த்தி பங்கேற்ற விழாவில், இது வரை பின்பற்றப்பட்டு வந்த ‘ஹிப்போகிரட்டிக்’ உறுதிமொழியை மாற்றி ‘மகரிஷி சரக சபதம்’ என்ற சமஸ்கிருதத்தில் இருக்கும் உறுதி மொழியை ஆங்கில மொழி வழியாக உறுதி ஏற்கும் நிகழ்வு நடைபெற்றது.

மருத்துவக் கல்லூரியில் புதிதாக மாணவர் சேர வரும்போது அவர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில் (White Coat Ceremony) ‘ஹிப்போகிரட்டிக்’ என்ற உறுதிமொழிதான் உலகம் முழுதும் ஏற்கப்பட்டு வருகிறது. இந்த உறுதிமொழியை ஆங்கில மருத்துவத்தின் தந்தையாகக் கொண்டாடப்படும் ஹிப்போகிரட்டீஸ் உருவாக்கினார்.

விழா நிகழ்ச்சி நடைபெறும் முதல் நாளன்று அவசர அவசரமாக தேசிய மருத்துவ ஆணையம் ‘மகரிஷி சரக சபதம்’ என்று உறுதிமொழியை ஏற்கலாம் என்று திடீர் என்று இணையம் வழியாக அறிவுறுத்தியிருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். புள்ளிகள் ஒவ்வொரு அதிகாரக் கட்டமைப்பிலும் ஊடுருவி தங்களது பார்ப்பனிய வேதக் கொள்கைகளை எப்படி தந்திரமாக நுழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இந்த நிகழ்வும் ஒரு சான்று.

‘மகிரிஷி சரக சபதம்’ என்ற சமஸ்கிருத உறுதிமொழியில் பிராமணர்களையும் பசுக்களையும் உயர்வாக மதிக்க வேண்டும் என்ற மனுசாஸ்திர பாசிச சிந்தனை உள்ளடக்கியிருக்கிறது. இந்த வரிகளையும் மட்டும் வெட்டிவிட்டு ஏனைய வாசகங்களை ஆங்கிலப்படுத்தி சூழ்ச்சியாக புகுத்தும் வேலை நடந்திருக்கிறது. ‘பசுவையும் பிராமணர்களையும்’ வணங்க வேண்டும் என்ற கருத்து இடம் பெற்றுள்ளது என்றால் அந்த உறுதிமொழியின் நோக்கமே பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடிப்பது என்ற உண்மையை தெட்டத் தெளிவாக்கி விடுகிறது. இந்த வரிகளை மறைத்து விடுவதால் மட்டும் அதன் நோக்கம் மாறிவிடுமா என்று கேட்கிறோம். ஆயுர்வேத மருத்துவத்தின் தந்தை மகரிஷி சரகம் என்று கூறுகிறார்கள். ஆங்கில வழி மருத்துவத் துறைக்கு அதன் தந்தையான ஹிப்போகிரட்டிக் தந்த உறுதிமொழியை புறந்தள்ளிவிட்டு ஆயுர்வேத மருத்துவத்தின் தந்தையை போற்றும் உறுதிமொழியை ஏன் ஏற்க வேண்டும்?

மதவாதம் பேசிய பழமைக் கருத்துகளை வென்று தான் மருத்துவ விஞ்ஞானமே வளர்ந்திருக்கிறது. ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த செல்வீடஸ் என்ற விஞ்ஞானி, இரத்தம் இதயத்திலிருந்து நுரையீரல்களுக்கு எப்படிச் செல்கிறது என்பதை மனித உடலைத் தேடி கீறிப் பார்த்து அந்தப் பாதையைக் கண்டுபிடித்தார். அதற்காக மனித உடலைக் கீறியது மத விரோதம் என்று கூறி அவரை கம்பத்தில் கட்டி வைத்து உயிருடன் கொளுத்தினார்கள். ‘மோட்சம்’ போகும் உடலை அறுத்து பிரேதப் பரிசோதனை செய்யக் கூடாது என்று பழமைவாதிகள் மதத்தின் பெயரால் எதிர்த்த வரலாறுகளும் உண்டு.

பார்ப்பனியத்தை எதிர்த்த சித்தர்கள், அவர்கள் உருவாக்கிய சித்த மருத்துவத்தின் தமிழ்ப் பெயர்களை சமஸ்கிருதமயமாக்கி தன் வயப்படுத்திக் கொண்டனர் பார்ப்பனர்கள். குடிநீரை கஷாயம் என்றும், ‘இளகலை’யை லேகியம் என்றும், நீற்றை பஸ்பம் என்றும், அமுக்கரா இளகலை என்பதை அஸ்வகந்தி லேகியம் என்றும், இலிங்கப்புளிப்பை ஜாதி ஜம்பீரம் என்றும், தீ நீரை திராவகம் என்றும், துணை மருந்துகளை அனுமானம் என்றும், காய்ச்சலை ஜுரம் என்றும் மாற்றினார்கள். ஒவ்வொரு நோய்க்கும் சித்த மருத்துவர்கள் சூட்டிய தமிழ்ப் பெயர்களை சமஸ்கிருதமாக்கியது குறித்து விரிவான நூல்களை ஆய்வாளர்கள் எழுதியிருக்கிறார்கள்.

தமிழக நிதியமைச்சர் விரைவிலே எதிர்ப்பைப் பதிவு செய்ததைப் பாராட்ட வேண்டும். மதுரை மருத்துவக் கல்லூரி டீன் இரத்தினவேல் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார். தமிழக அரசின் இந்த உடனடி நடவடிக்கை மிகவும் பாராட்டுக்குரியது. இதுவே கடந்தகால ஆட்சிகளாயிருந்தால் இவர்கள் கவுரவிக்கப்பட்டிருப்பார்கள். சென்னை அய்.அய்.டி. களில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைப் பாடாமல், சமஸ்கிருதத்தில் வந்தே மாதரம் பாடப்பட்டு வந்தது எதிர்ப்பு தெரிவித்தது. தமிழக அரசு, ஒன்றிய ஆட்சிக்கு கடிதம் எழுதியதால் இப்போது ‘தமிழ்த் தாய் வாழ்த்து’ பாடுவதற்கு ஒன்றிய ஆட்சி அனுமதி வழங்கியிருக்கிறது. அய்.அய்.டி. நிறுவனங்களில் சமஸ்கிருதம், ஒரு பாடமாக்கப்பட்டுள்ளது. அய்.அய்.டி.க்கும் சமஸ்கிருதத்துக்கும் என்ன தொடர்பு?

சமஸ்கிருதத்துக்கும் பார்ப்பனியத்துக்கும் உள்ள தொடர்பு தான் இதற்கு அடிப்படை. இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். பெரியார் கூறினார்:

> “சமஸ்கிருதம் பரவினால் தான் பார்ப்பனர்கள் வாழ முடியும். சுரண்ட முடியும். நம்மை கீழ் ஜாதி மக்களாக ஆக்க முடியும். அவன் பிராமணனாக இருக்க முடியும். அதன் நலிவு பார்ப்பண ஆதிக்கத்தின் சரிவு என்று உணர்ந்து ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வ ஜாக்கிரதையோடும் விழிப்போடும் காரியம் செய்துவருகிறார்கள்” – விடுதலை 15.02.1960

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகளில் கால் பதிக்க நினைக்கும் சமஸ்கிருதத்தை ‘திராவிட மாடல்’ திருப்பி அடித்து வெளியேற்றி தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்திருக்கிறது.

## ‘ஆன்மீக உளவியல்’ எனும் கற்பனை

**எட்வின் பிரபாகரன்**

‘நிமிர்வோம்’ மாத இதழில் 2020 ஆம் ஆண்டில் வெளி வந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடுகிறோம்.

**புதிர் 10:** உப்டோன் பியல் சின்கிலைர் என்ற அமெரிக்க எழுத்தாளர், தன்னுடைய துணைவி மேரி கிரெய்க்குக்கு, Telepathy (நுண்ணுணர்வு) இருப்பதை அறிந்து கொண்டு, நுண்ணுணர்வில் ஆய்வு செய்தார். தன்னுடைய துணைவிக்கு நுண்ணுணர்வு திறனால் கிடைத்த அனுபவங்களை, “Mental Radio” என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். தன் வீட்டுக்கு வரும் பல முக்கிய பிரமுகர்களுக்கு, தன் துணைவியின் நுண்ணுணர்வுத் திறனை நிரூபித்துக் காட்டியுள்ளார். இதனால், அறிவியலை மிஞ்சிய ஆன்மீக உளவியல் உண்டு என்பது உறுதியாகிறது.

**உச்ச நீதிமன்ற நீதிபதி இராம சுப்ரமணியத்தின் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (6)**

**விடை:** எவ்வளவோ சோதனைகளை நடத்திய போதும், நுண்ணுணர்வை நிரூபிக்க ஒரு சான்றும் கிடைக்கவில்லை என்ற உண்மையை டால்க்விஸ்ட் (1994), ஹோக்கார்ட் (1995), ராபர்ட் கோகன் (1998), டெரென்ஸ் ஹைன்ஸ் (2003) ஆகிய பேராசிரியர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அமேரிக்க தேசிய ஆராய்ச்சிக் குழு, “130 ஆண்டுகால ஆராய்ச்சியில் நுண்ணுணர்வை நிரூபிக்கும் சான்று ஒன்றும் இல்லை என்று அறிவித்துள்ளது. ஆன்மீக உளவியலையே (Para Psychology) போலி அறிவியல் என்று மருத்துவ உலகம் பிரகடனப்படுத்துகிறது.

இவ்வாறாக ஆன்மீக உளவியல் என்ற கற்பனையை வைத்துக் கொண்டு, மக்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பவர்கள் மத்தியில், தாங்கள் செய்வது மந்திரமல்ல, தந்திரமே! என்று முரசறைபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அத்தகையோருள் ஒருவர் ஹேரி ஹவ்டினி. உலோகத்தால் செய்யப்பட்ட பூட்டுகளையும், கை விலங்குகளையும் சர்வ சாதாரணமாக உடைப்பதில் வல்லவர். 1899ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் தேதி சான் ஃப்ரான்சிஸ்கோ நகர போலீஸ் தலைமையகத்தில், அவருடைய சவாலை ஏற்று, காவல்துறையினர் அவரை நிர்வாணமாக்கி, அவர் உடலில் ஏதாவது மறைக்கப்பட்டிருக்கிறதா என்று பரி சோதித்த பின், அவருடைய கைகளை பின்னால் இணைத்து, 10 விலங்குகளால் அவரைப் பூட்டினர்.

கைகள் மற்றும் முழங்கால்கள் பல சங்கிலி களால் கோர்க்கப்பட்டு, அவற்றின் மீது பூட்டுகள் போடப் பட்டன. அவரை ஒரு சிறை அறையில் அடைத்து வைத்து விட்டு, வெளியே பூட்டு போட்டனர். யாரும் எதிர் பார்க்காத வண்ணம், 10 நிமிடங்களில், அனைத்து பூட்டுகளிலிருந்தும், விலங்குகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு, கம்பீரமாக வெளியே வந்தார் ஹேரி ஹவ்டினி. அவர் நினைத்திருந்தால், தன்னிடம் ஏதோ சக்தி இருக்கிறது என்று கூறி, மக்களை ஏமாற்றி பிழைத்திருக்க முடியும். ஆனால், சீரிய பகுத்தறிவாளரான அவர், அதைச் செய்யவில்லை.

மாறாக, தனக்கு தெரிந்த மந்திர (தந்திர) வித்தைகளை பயன்படுத்தி, யாரெல்லாம் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று மக்களுக்கு அடையாளம் காட்டினார். “Scientific American” (அறிவியல் அமெரிக்கன்) என்ற அமைப்பில் இணைந்து போலி மதகுருக்களின், போலி அறிவியலாளர்களின் மந்திர தந்திரங்களை அம்பலப் படுத்தி பகுத்தறிவுத் தொண்டாற்றி மறைந்தார்.

(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)

(தொடரும்)

## “நடராஜ மகாத்மியம்” நூல் எழுதியவர் மீது பாஜக புகார் அளிக்குமா?

### தமிழ்நாடு பாஜவினருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேள்வி

### கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

U2Brutus வலைக்காட்சியில் சிதம்பரம் நடராஜன் சிலை குறித்து பேசியதற்காக இந்துமதக் காவலர்களாக தங்களைக் காட்டிக் கொள்ளும் பாரதிய ஜனதா கட்சியினர் அறிக்கை, புகார் என அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

‘நடராஜ மகாத்மியம்’ என்ற நூலில் எழுதப்பட்டு இருக்கிற செய்திகளை மேற்கோள்காட்டி “இந்து மதம் எங்கே போகிறது?” என்ற நூலின் முதல் பதிப்பில் 190,191,192,193 ஆகிய பக்கங்களில் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் எழுதி உள்ளதை எடுத்துப் பேசியிருக்கிறார். அதற்கு தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலையும், எச். ராஜா என்பவரும் உடனடியாக அந்த வலைக்காட்சி யில் தொடர்புள்ள அனைவரையும் கைது செய்ய வேண்டும் என்பது போன்ற அதி புத்திசாலித்தனமான கோரிக்கைகளை முன்வைத்து அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

முறையான அரசியல் செய்வதற்கு சரியான காரணங்கள் எதுவும் கிடைக்காத காரணத்தால், கடலில் தத்தளிக்கும் ஒருவர் துரும்பு கிடைத்தாலும் பிடித்துக்கொண்டு தப்பித்து விடலாம் என்று நம்புவதைப் போல, இந்த செய்தியை எடுத்து ஊதிப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கே அந்தக் கட்சியின் மிக மிக புத்திசாலிகளான உறுப்பினர்கள் புகார் மனு அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நாங்கள் சொல்ல விரும்புவது:

ஒரு நூலில் உள்ள செய்தியை எடுத்துச் சொன்னதற்காக ஒருவரை கைது செய்ய வேண்டும்; தொடர்புள்ள அனைவரையும் கைது செய்ய வேண்டும் என்றால், எழுதியவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்? அப்படிப்பட்ட சங்கதிகளை உள்ளடக்கிக் கொண்டு இருக்கிற அந்த ’நடராஜ மகாத்மியம்’ என்ற நூலினை என்ன செய்ய வேண்டும்? என்பது குறித்து அவர்கள் கருத்து எதையும் சொல்லவில்லை.

உண்மையிலேயே இதனால் அவர்களுடைய மென்மையான மனங்கள் புண்பட்டு இருக்குமேயானால் .... இப்படிப்பட்ட ஆபாச செய்தியைத் தாங்கி இருக்கிற ’நடராஜ மகாத்மியம்’ என்ற நூலைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும், அதனை அச்சிட்டு வெளியிட்டு இருப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும், அந்த நூலின் படிகள் அனைத்தையும் உடனடியாக கைப்பற்ற வேண்டும், பறிமுதல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும்தான் அவர்கள் அவர்கள் வைத்திருக்க வேண்டும்!

சரி, நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்! நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்!

இனிமேலாவது இப்படிப்பட்ட சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று திரு. அண்ணாமலை அவர்களுக்கும் அவரது கட்சிக்காரர்களுக்கும் எடு(இடி)த்துரைக்க விரும்புகிறேன்.

# மோடி ஆட்சியில் நடக்கும் வங்கி சூறையாடல்

# கொழுக்கிறார்கள் – பார்ப்பன பெரு முதலாளி 'இந்துக்கள்'; வதைபடுகிறார்கள் – ஏழை எளிய 'இந்துக்கள்'

***அரசு வங்கிகளில் பல்லாயிரம் கடன் வாங்கி பட்டை நாமம் சாத்தி விட்டு வெளிநாட்டில் சொகுசு வாழ்க்கை நடத்துகிறார்கள். பார்ப்பன–பனியா 'இந்துக்கள்'.***

***உழைக்கும் இந்துக்கள் வங்கிகளில் பெறும் சில ஆயிரம் ரூபாய்க்கு அவமானப் படுகிறார்கள்.***

17 வங்கிகளில் 9,000 கோடி ரூபாய் கடன் பெற்று திருப்பிச் செலுத்தாத வழக்கில், 2016ஆம் ஆண்டு நாட்டை விட்டு தப்பியோடியவர் விஜய் மல்லையா. பஞ்சாப் நேசனல் வங்கியில் 14,000 கோடி ரூபாய் கடன் மோசடி செய்த வழக்கில் 2018ஆம் ஆண்டில் இந்தியாவை விட்டு தப்பியோடிவர்கள் குஜராத்தை சேர்ந்த வைர வியாபாரி நீரவ் மோடியும், அவரது மாமனார் மெகுல் சோக்சியும். அதனைத்தொடர்ந்து நாட்டையே உலுக்கிய 23,000 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் மோசடியில் குஜராத்தைச் சேர்ந்த ஏ.பி.ஜி. ஷிப்யார்டு என்னும் கப்பல் கட்டுமான நிறுவனம் சிக்கியுள்ளது. இன்றைய தேதியில் இதுதான் இந்தியாவின் மிகப்பெரிய வங்கிக்கடன் மோசடி. இந்நிறுவனத்திற்கு இடம் வழங்கியது குஜராத் மாநில பாரதிய ஜனதா அரசுதான் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

ஊடகங்கள் அதிகம் பேசிய இந்த வங்கி மோசடிகளை தாண்டி, கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்த வங்கி மோசடிகள் ஏராளம். ராஜஸ்தான் சிண்டிகேட் வங்கியின் 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான மோசடி, ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த சாந்தா கோச்சர், அவரது கணவர் தீபக் கோச்சர், வீடியோகான் தலைமை நிர்வாகி அதிகாரி வேணுகோபால் தூத் ஆகியோர் தொடர்புடைய ரூ.1,875 கோடி மதிப்பிலான வங்கிக்கடன் மோசடி, ரோட்டோமேக் பென்ஸின் ரூ.3,695 கோடி மதிப்பிலான வங்கிக்கடன் மோசடி, ரூ.4,355 கோடி மதிப்பிலான பி.எம்.சி. வங்கி மோசடி, ஓரியண்டல் மற்றும் பேங்க் ஆஃப் பரோடா வங்கியின் ரூ..6,000 கோடி ரூபாய் மதிப்பிலான வெளிநாட்டு பரிவர்த்தனை மோசடி, பிரைப் நிறுவனத்தின் ரூ.8,000 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் மோசடி என பெரிதும் வெளிச்சத்திற்கு வராத வங்கி மோசடிகளும் ஏராளம்.

இதையெல்லாம் விட பெரியக்கொடுமைகள் பல இருக்கின்றன. சாதாரண கூலித் தொழிலாளர்கள் வங்கிக் கணக்கில் குறைந்தபட்ச தொகையை சரியாக பராமரிக்காவிட்டால் கூட கட்டணம் விதிக்கிறது ரிசர்வ் வங்கி. 3 முறைக்கு மேல் ஏடிஎம்.களில் பணம் எடுக்கக்கூட கட்டணம் வந்துவிட்டது. அவ்வளவு கணக்காக, உழைக்கும் மக்களிடம் பணத்தை கறக்கும் வங்கிகள், மோடி அரசின் முதல் 7 ஆண்டுகளில் வாராக்கடனால் இழந்தவை மட்டும் ரூ.10.72 லட்சம் கோடி ரூபாய். இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகம் 2021ஆம் ஆண்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் எழுப்பிய கேள்விக்கு ரிசர்வ் வங்கி அளித்த பதில் இந்த உண்மை வெளிப்பட்டுள்ளது.

தள்ளுபடி செய்யப்பட்ட மொத்த வாராக் கடனில் சுமார் 75 விழுக்காடு கடன்கள் பொதுத் துறை வங்கிகள் கொடுத்த கடன்களாகும். 2020-21 நிதியாண்டில், ஸ்டேட் வங்கியால் தலைமை தாங்கப்படும் ஐந்து வங்கிகள் மட்டும் ரூ. 89,686 கோடி ரூபாய் வாராக்கடன்களை தள்ளுபடி செய்திருக் கின்றன. ஆனால் யார் யாருக்கு கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்ற முழு விவரங்களை வங்கிகள் வெளியிடவில்லை. மாணவர்கள் பெறும் கல்விக்கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத பட்சத்தில் புகைப் படங்களை வெளியிட்டு அவமதிக்க எவ்வித தயக்கமும் காட்டாத வங்கிகள், பெரு நிறுவனங்களை காட்டிக்கொடுப்பதில் மட்டும் கள்ள மவுனம் சாதிக்கின்றன. மோடியின் நெருங்கிய நண்பரான கவுதம் அதானிக்கு மட்டுமே சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. பெரு நிறுவனங்களின் லட்சக் கணக்கான கோடி ரூபாய் கடன்களை மிக எளிமையாக தள்ளுபடி செய்ய அனுமதிக்கும் ஒன்றிய அரசுக்கு கொரோனா பேரிடர் காலத்தில்கூட ஏழை, எளிய மக்களுக்கு பண உதவி செய்ய மனம் வரவில்லை. மாணவர்களின் கல்விக் கடனை, வேளாண் கடன்களையோ, சிறு, குறு நிறுவனங்களின் தொழில் கடன்களை ரத்து செய்வதே இல்லை. மோடி யாருக்கான ஆட்சியை நடத்துகிறார் என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.




பெரும் தனியார் நிறுவனங்களும், பணபலம் படைத்தவர்களும் சட்டத்துக்குட்பட்டே, யாருக்கு எவ்வளவு வழங்கினார்கள் என்னும் தகவலை வெளியிடாமலேயே, எந்த வரையறையும் இன்றி கட்சிகளுக்கு நன்கொடை வழங்கலாம். ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா என்னும் பொதுத் துறை நிறுவனம் மூலமே இந்த பரிமாற்றங்கள் நடைபெறுவதால் இதன் ஒட்டு மொத்த பிடியும் மறைமுகமாக ஒன்றியத்தை ஆளும் அரசின் கைகளிலேயே இருக்கும்.

## கார்ப்பரேட் சேவைக்கு பாஜகவுக்கு கிடைக்கும் பரிசு

சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் அதல பாதாளத்தில் வீழ்ந்தன. அப்போது அடைக்கப் பட்ட சில நிறுவனங்களின் கதவுகள் நிரந்தரமாகவே அடைபட்டுவிட்டன.

செல்லாது என்று அறிவிக்கப்பட்ட பணம் முழுமையாக ரிசர்வ் வங்கிக்கு திரும்பியது. ஆனால் எவ்வளவு பணம் திரும்பியது என்று துல்லியமாக கடைசிவரை அறிவிக்கவில்லை. மொத்தத்தில் மிகப் பெரிய தோல்வியை தழுவியது அத்திட்டம். கறுப்புப் பணம் பணமாகவே இருக்கும் என்ற திரைப்பட மடத்தனத்தை நிஜத்தில் செய்து காட்டிய மோடியின் சர்க்கஸ் என்று பொருளாதார நிபுணர்கள் விமர்சித்தனர். கறுப்புப் பணத்தை ஒழிக்க போராடுவதாக சொல்லிக்கொள்ளும் இந்த மோடி அரசுதான் அரசியல் கட்சிகள் நன்கொடை பெறுவதற்காக 2017-ஆம் ஆண்டில் தேர்தல் பத்திரங்கள் என்ற முறையை உருவாக்கியது.

இந்தக் பத்திரங்களைக் குறிப்பிட்ட சில தேதிகளில் மட்டும் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவிடமிருந்து நன்கொடை வழங்க நினைக்கும் நபர்களோ அல்லது நிறுவனங்களோ காசோலை வழங்கி பெற்றுக் கொள்ளலாம். வாங்கிய பத்திரத்தை எந்தக் கட்சிக்கு நன்கொடை வழங்க விரும்புகிறார்களோ அந்தக் கட்சியிடம் அதை ஒப்படைத்துவிட வேண்டும். பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட அரசியல் கட்சி, வங்கியில் அதை ஒப்படைத்து, தனது வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட நன்கொடையைப் பெற்றுக் கொள்ளலாம். இவை அனைத்தும் 15 நாட் களுக்குள் நடக்க வேண்டும். இந்தப் பரிவர்த்தனைகள் எதுவும் பொதுவெளியில் தெரியாது. அரசியல் கட்சிகளும், யாரிடம் தேர்தல் பத்திரங்கள் வழியாக நன்கொடை பெற்றார்கள் என்னும் விவரங்களை வெளியிடத் தேவையில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழியாகவும் இதுகுறித்த தகவல்களைப் பெற முடியாது. இந்த விவரங்களைத் தெரிந்துகொள்ள தேர்தல் ஆணையத்தாலும் முடியாது.

பெரும் தனியார் நிறுவனங்களும், பணபலம் படைத்தவர்களும் சட்டத்துக்குட்பட்டே, யாருக்கு எவ்வளவு வழங்கினார்கள் என்னும் தகவலை வெளியிடா மலேயே, எந்த வரையறையும் இன்றி கட்சிகளுக்கு நன்கொடை வழங்கலாம். ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா என்னும் பொதுத் துறை நிறுவனம் மூலமே இந்த பரிமாற்றங்கள் நடைபெறுவதால் இதன் ஒட்டு மொத்த பிடியும் மறைமுகமாக ஒன்றியத்தை ஆளும் அரசின் கைகளிலேயே இருக்கும். தேவைப்பட்டால் அமலாக்கத்துறை, சிபிஐ போன்ற அமைப்புகள் விசாரணைக்கு பெறலாம். இதனால் ஆட்சியில் இருக்கும் கட்சி யாரிடமிருந்து பணம் பெறுகிறது என்றே தெரியாத அளவுக்கு ஏகபோகமாக பெற வாய்ப்பு உருவாகிறது என்று பொருளாதார அறிஞர்கள் பலரும் குற்றம்சாட்டினர். பலரது குற்றச்சாட்டை மெய்ப்பிக்கும் வகையில் பாரதிய ஜனதாவுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைக்கும் நிதி ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே செல்கிறது.

குறிப்பாக நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்ற 2019-20 நிதியாண்டில் மட்டும் பாரதிய ஜனதா, கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து மட்டும் 720 கோடி ரூபாய்க்கும் மேல் பெற்றுள்ளது. இது காங்கிரஸ் பெற்ற 139 கோடி ரூபாயைக் காட்டிலும் 5 மடங்கு அதிகம். அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய கட்சிகளும் பெற்ற தொகையே 922 கோடி ரூபாய்தான். 2019-20 நிதியாண்டில் தேர்தல் பத்திரங்கள் மூலம் பாரதிய ஜனதா பெற்ற மொத்த நன்கொடை 2,555 கோடி ரூபாய். இது அந்த நிதியாண்டில் அனைத்துக் கட்சிகளுக்கும் கிடைத்த நன்கொடை யில் 76 விழுக்காடு. 2018-19 நிதியாண்டில் பாரதிய ஜனதாவுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைத்த 1,450 கோடி ரூபாயைக் காட்டிலும் 75 விழுக்காடு அதிகம். ஆனால் எதிர்க்கட்சியான காங்கிரஸிற்கு 2018-19 நிதியாண்டில் கிடைத்த நன்கொடையை விட 2019-20 நிதியாண்டில் 17 விழுக்காடு குறைவாகவே கிடைத்துள்ளது. 2018-19-இல் தேர்தல் பத்திரங்கள் மூலம் 383 கோடி ரூபாய் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி 2019-20 நிதியாண்டில் 318 கோடி ரூபாய் என குறைவாகவே பெற்றுள்ளது.

பாரதிய ஜனதா பெற்றுள்ள 2,555 கோடி ரூபாய்க்கும், காங்கிரஸ் பெற்ற 318 கோடி ரூபாய்க்கும் இடையே உள்ள மலையளவு வித்தியாசத்தை பார்த்தாலே தேர்தல் பத்திரங்கள் மூலம் நடைபெறும் தில்லுமுல்லுகளை உணரலாம். காங்கிரஸின் நிலைமையே இதுதான் என்றால் பிற தேசிய கட்சிகள், மாநில கட்சிகள் பெற்ற நன்கொடைகளை ஒப்பிட வேண்டிய அவசியமே எழவில்லை. இத்தகைய சமத்துவமின்மை தேர்தல் களத்தில் எப்படி சமமான போட்டியை உண்டாக்கும் என்பதை கேள்விக்குட்படுத்த வேண்டியுள்ளது. பெரு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பாரதிய ஜனதா செய்யும் அரும்பெரும் சேவைகளுக்கு கிடைக்கும் பரிசுதான் இவ்வளவு நன்கொடையா என்றும் சந்தேகிக்க வேண்டியுள்ளது. அது மட்டுமல்ல, தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமலாக்கத்துறை, சிபிஐ ஆகியவற்றை சாவி திருகும் பொம்மைகளாக பாரதிய ஜனதா பயன்படுத்துவதையும் இதனோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டியுள்ளது. 2019-20 நிதியாண்டில் பிரபல கட்டுமான நிறுவனர் சுதாகர் ஷெட்டிக்கு சொந்தமான குல்மார்க் ரியல் எஸ்டேட் நிறுவனம் பாரதிய ஜனதாவிற்கு 20 கோடி ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளது. 2020 ஜனவரியில்தான் அமலாக்கத்துறை இந்நிறுவனத்தில் சோதனை நடத்தியது.

எனவே, நடைமுறையில் உள்ள தேர்தல் பத்திர முறை துளியும் வெளிப்படைத்தன்மை அற்றதாகவும், கறுப்பு பணத்தை ஊக்குவிப்பதாகவுமே இருக்கிறது. இதன்மூலம் அதிக ஆதாயம் பெறும் கட்சியாகவும் பாரதிய ஜனதா இருக்கிறது. பாரதிய ஜனதா ஆட்சியில் ஊழலே இல்லை என்று பேசும் வலதுசாரிகள் பலர் இருக்கிறார்கள். ஊழலை சட்டப்பூர்வமாக்கி விட்டால், பின்னர் எப்படி அது ஊழலாக இருக்கும்? தேர்தல் பத்திரங்கள் சட்டப்பூர்வ ஊழல் என்பதைத்தான் இந்த புள்ளிவிவரங்கள் நிறுவுகின்றன.

**'நிமிர்வோம்' வெளியிடாக வெளி வந்துள்ள ர. பிரகாஷ் எழுதிய 'மோடி இந்துக்களுக்கு என்ன செய்தார்' நூலிலிருந்து**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மோடியின் மதவெறி - மக்களை சுரண்டும் ஆட்சிக்கு எதிராக அலை வீசுகிறது

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்றுப் பேசினார் பரப்புரையை திமுக செஞ்சி பேரூராட்சித் தலைவர் மொகத்தியர் அலி மஸ்தான் தொடங்கி வைத்தார். தமுமுக மாவட்ட அமைப்பாளர் சையத் உஸ்மான், தமுமுக அலி ஜான், தமுமுக அசரப் ஆகியோர் பரப்புரைப் பயணத்தின் முக்கியத்துவத்தை வரவேற்றுப் பேசினார்கள்

தொடர்ந்து வளத்தியில் நெடுஞ்செழியன் பயணக் குழுத் தோழர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்று பேசினார்.

மதியம் உணவு இடைவேளைக்கு பிறகு மேல்மலையனூர் பேருந்து நிலையத்தில் பரப்புரை பயணத்தை வரவேற்று திமுக மையக்குழு உறுப்பினர் பேசினார்கள் பயண நிறைவாக கீழ் பெனாத்தூர் பகுதியில் திமுக கழக வர்த்தக அணி செயலாளர் முர்த்தி, சங்பரிவார் ஆர்.எஸ்.எஸ் ன் ஆபத்தான அரசியலை அம்பலப் படுத்திப் பேசினார்.

பரப்புரை நிகழ்ச்சியில் மக்கள் குடியரசு கட்சி தலைவர் தம்பி மண்டேலா, மக்கள் குடியரசு இயக்க மாவட்டச் செயலாளர் சக்திவேல், சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பரப்புரை பயணத்தில் திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார், திராவிடர் விடுதலைக் கழக விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ. இளையரசன் ஆகியோர் பரப்புரையின் நோக்கத்தை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். பேசப்பட்ட கருத்துகளை மக்கள் ஆர்வமுடன் கேட்டனர்.

இரண்டு நாள் பரப்புரையிலும் 2000 ஆயிரம் துண்டறிக்கைகள் மக்களிடம் வழங்கப்பட்டது.

**கோவை :** 30.04.2022, சனிக்கிழமை மாலை சூலூர் பேருந்து நிலையத்தில் நமக்கான அடையாளம் திராவிட மாடல், மண்டல மாநாடு விளக்க பரப்புரைப் பயணம் நிகழ்வு மாலை 4.30 மணியலவில் நடைபெற்றது.

சூலூர்தமிழ்ச்செல்வி தலைமையில் நிகழ்வின் நோக்கம் மற்றும் திராவிட இயக்க முன்னோடிகள் மொழிபோர் தியாகிகள் பற்றிய நினைவு செய்திகளை விளக்கி கூறி நிகழ்வு தொடங்கப்பட்டது. தோழர்கள் உக்கடம் கிருஷ்ணன், சவுரிபாளையம் டிட்டோ போட்டோ கிராபர் சிவராசன் கொள்கை விளக்க பாடல்கள் பாடினார்கள்.

அடுத்து தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் திருப்பூர் மகிழவன், கல்வி வேலைவாய்ப்பு உரிமைகள் பறிப்பு பற்றிய கருத்துகளை கூறி உரையாற்றினார். சூலூர் நகர தி.மு.க பொருளாளர் ச.அங்கமுத்து திராவிட இயக்கம் தமிழகத்தில் நிகழ்த்திய சாதனைகளையும் மறுக்கப்படும் உரிமைகளையும் விளக்கி பேசினார்கள். அடுத்து பாவேந்தர் பேரவை சார்பாக ஓய்வு பெற்ற ஆசிரியர் வேலுமயில் உரையாற்றினார்.

பின் திவிக கோவை மாநகர தலைவர் நேருதாஸ் உரைக்கு பின் திராவிடர் விடுதலைக்கழக கோவை மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி வெள்ளிங்கிரி, மறுக்கப்படும் உரிமைகளை பற்றியும் மதவெறி திணிப்பு பற்றியும் சிறப்பாக உரையாற்றினார். நாகலட்சுமி நன்றியுடன் நிகழ்வு நிறைவுற்றது.

நிகழ்வில் மாநில பொருளாளர் சு.துரைசாமி, கோவை மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி யாழ் வெள்ளிங்கிரி, மாநகர செயலாளர் மண்டல மாநாடு ஒருங்கினைப்பாளர் நிர்மல் குமார், மாநகர அமைப்பாளர் ஜெயந்த், பொள்ளாச்சி தோழர்கள் கணேசன், சிவா உடுமலை பாண்டிய நாதன், சூலூர் ஒன்றிய செயலாளர் சூலூர் பாபு, சூலூர் நகர பொறுப்பாளர் முனியப்பன், நீலம்பூர் அமைப்பாளர் தங்கராசு, அதிமுக மொழி பேராட்ட வீரர் மகன் பரணன், மதிமுக பூபதி மற்றும் திமுக, பாவேந்தர் பேரவை, பெரியார் உணர்வாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

30.04.2022 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு செல்வராசபுரம், பாப்பம் பட்டி பிரிவு வெ.இரா.கு. செங்குட்டுவன் நினைவுத் திடலில் சூலூர் ஒன்றிய திவிக செயலாளர் சூலூர் பாபு, மறைந்த திராவிட இயக்கக் கொள்கையாளர் வெ.இரா. குண. செங்குட்டுவனின் இயக்கப் பணி போராட்டங்கள் பற்றி விளக்கி தொடக்க உரையாற்றினார். தமிழ்நாடு மாணவர் கழக விஷ்ணு, பறிபோகும் கல்வி வேலை வாய்ப்புகளை விளக்கிக் கூறினார்.

மாவட்ட திவிக செயலாளர் பொள்ளாச்சி வெள்ளியங்கிரி, மாநில பொருளாளர் சு.துரைசாமி சிறப்புரையாற்றினர். முனியப்பன் நன்றியுரையாற்றினார்.

கலந்து கொண்ட தோழர்கள் : மாநில பொருளாளர் சு.துரைசாமி, கோவை மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி யாழ் வெள்ளிங்கிரி, மாநகர செயலாளர் மண்டல மாநாடு ஒருங்கினைப்பாளர் நிர்மல் குமார், மாநகர அமைப்பாளர் ஜெயந்த், பொள்ளாச்சி தோழர்கள் கணேசன், சிவா, உடுமலை பாண்டிய நாதன், சூலூர் ஒன்றிய செயலாளர் சூலூர் பாபு, சூலூர் நகர பொறுப்பாளர் முனியப்பன், நீலம்பூர் அமைப்பாளர் தங்கராசு மற்றும் திமுக தோழர்கள்.

**இருகூர் சந்தை :** 30.04.2022 சனிக்கிழமை இரவு 7 மணியளவில் இருகூர் சந்தை பகுதியில் சிவராசு தலைமை தாங்க, கிருஷ்ணன் பரப்புரை பாடல் ஒன்றை பாட, தமிழ்நாடு மாணவர் கழக திருப்பூர் மகிழவன் மாணவர் உரிமைகள் சார்ந்து சிறு உரையாற்றினார்.

அடுத்ததாக இருகூர் பேரூர் கழக திமுக பொறுப்பாளர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ஓய்வு பெற்ற ஆசிரியர் என பகுதி திராவிட இயக்க உணர்வாளர்கள் திராவிட மாடலின் நோக்கத்தினை பற்றி உரையாற்றினார்கள். மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பாண்டியநாதன், ஆனைமலை கணேசு உள்ளிட்டோர் திராவிட மாடல் ஏன் நமக்கான அடையாளம் என்பதை பற்றி பேசினார்கள்.

இறுதியாக மாவட்ட கழகச் செயலாளர் வெள்ளிங்கிரி, மாநில பொருளாளர் துரைசாமி, ஒன்றிய அரசால் பறிக்கப்பட்டு வரும் மாநில உரிமைகள், ஜி.எஸ்.டி. உள்ளிட்டவை குறித்து விரிவாக உரையாற்றினர்.

இந்த தெருமுனைக் கூட்டத்தில் பங்கேற்ற கழகத் தோழர்களுக்கு திமுக பேரூர் கழக நிர்வாகிகள் பயணாடை அணிவித்து பாராட்டி மகிழ்ந்தனர். நிறைவாக தங்கராசு நன்றியுரை கூறினார்.

இதில் தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர். இந்த தெருமுனை கூட்டத்தில் மாநாட்டையொட்டி கழகம் வெளியிட்ட வெளியீடுகளை மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர். ரூ.1850-க்கு நூல்கள் விற்பனையானது. புத்தக விற்பனையை தோழர்கள் தமிழ்செல்வி, நாகலட்சுமி ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டனர்.

இந்நிகழ்வை கழக தலைமைக் குழு உறுப்பின சூலூர் பன்னீர்செல்வம் மற்றும் சிவராசு ஆகியோர் சிறப்பாக செய்தனர். அனைவருக்கும் இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டது..

**ஆனைமலை பகுதி :** கோவை மாவட்டம் ஆனைமலை தாலுகாவிற்கு உட்பட்ட காளியாபுரம், வேட்டைக்காரன்புதூர், ஆனைமலை ஆகிய பகுதிகளில் 26.04.2022 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நமக்கான அடையாளம் திராவிட மாடல் தெருமுனை கூட்டங்கள் நடைபெற்றது

மாலை 4 மணி அளவில் காளியாபுரத்தில் சட்ட எரிப்பு போராளி நரசிம்மன் நினைவு திடலில் அரிதாசு தலைமையில் தோழர்கள் வினோதினி-கிருஷ்ணன் பாடலுடன் தொடங்கியது. சிறப்புரையாக மாநில பொருளாளர் துரைசாமி, கோவை மாவட்ட செயலாளர் வே.வெள்ளிங்கிரி, கோவை மாநகர செயலாளர் நிர்மல் குமார், பன்னீர்செல்வம் தலைமை குழு உறுப்பினர், வெல்பேர் பார்ட்டி அமைப்பைச் சார்ந்த மணிமாறன் உரையாற்றினர்கள்.

மாலை 6 மணி அளவில் வேட்டைக்காரன்புதூரில் சட்ட எரிப்பு போராளி காளிமுத்து நினைவுத் திடலில் ஜாதி ஒழிப்பு பாடலுடன் தொடங்கி தி.மு.கவில் செல்வம், விசிக.வில் அப்பன்குமார், வெள்ளிங்கிரி சிறப்புரை ஆற்றினார்கள். இரவு 7 மணிக்கு ஆனைமலையில் சட்ட எரிப்பு போராளி A.K. முஹமது அனிபா நினைவு திடலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிருஷ்ணன், வினோதினி கொள்கை விளக்கப் பாடல்களை பாடி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

மகிழவன் தமிழ்நாடு மாணவர் கழகம், நிர்மல் குமார், பாண்டிய நாதன், வெள்ளிங்கிரி, துரைசாமி ஆகியோர் திராவிட மாடல் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர். இந்த தெருமுனை கூட்டத்திற்கு வே. ஹரிதாஸ் தலைமை தாங்கினார். ஆனந்த் முன்னிலை வகித்தார்.

**ஈரோடு :** ஈரோடு தெற்கு மாவட்ட திராவிடர் விடுதலை கழகம் நடத்தும் தமிழ்நாட்டு மாநில உரிமை, கல்வி உரிமை, பண்பாட்டு உரிமைகளை மீட்டெடுக்கும் பரப்புரைப் பயணம், நமக்கான அடையாளம் திராவிட மாடல் எனும் தலைப்பில் 1.5.2022 ஞாயிறு மே தினத்தன்று சித்தோடு பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் தொடங்கி நடைபெற்றது. தெருமுனை கூட்டத்திற்கு ஆறுமுகம் தலைமையேற்று காலை 11 மணியளவில் தொடங்கியது. இதில் அமைப்பு செயலாளர் ப.ரத்தினசாமி, அறிவியல் மன்ற பொறுப்பாளர் ப. சிவகுமார், தலைமை கழகப் பேச்சாளர் காவை இளவரசன், மாவட்ட தலைவர் செல்வராஜ் ஆகியோர் உரையாற்றினர். லீலாவதி, தேநீர் வழங்கி உபசரித்தார்.

பகல் ஒரு மணி அளவில் நசியனூரில் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆசிரியர் சிவக்குமார், காவை இளவரசன், அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி ஆகியோர் உரையாற்றினர். மதிய உணவு ஆசிரியர் கோபால் வழங்கினார். நசியனூர் குமார் பயணச் செலவுக்காக ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார்.

நமக்கான அடையாளம் திராவிட மாடல் தெருமுனை கூட்டம் இன்று காலை சித்தோடு பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் தொடங்கி தொடர்ந்து நசியனூரிலும், அதைத் தொடர்ந்து மாலை 5 மணி அளவில் பெருந்துறை பேருந்து நிலையத்தில் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. இதில் ஆசிரியர் சிவக்குமார், கிருஷ்ணமூர்த்தி, அமைப்புச் செயலாளர் ப.ரத்தினசாமி ஆகியோர் உரையாற்றினர். கழக ஆதரவாளர் சின்னசாமி தேனீர் வழங்கியும் டீசல் 5 லிட்டர் வழங்கியும் வழியனுப்பி வைத்தார்.

மாலை 5 மணி அளவில் பெருந்துறை பேருந்து நிலையத்தில் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. இதில் ஆசிரியர் சிவக்குமார், கிருஷ்ணமூர்த்தி, அமைப்புச் செயலாளர் ப. ரத்தினசாமி ஆகியோர் உரையாற்றினர். கழக ஆதரவாளர் சின்னசாமி தேனீர் வழங்கியும் டீசல் 5 லிட்டர் வழங்கியும் வழியனுப்பி வைத்தார்.

## கழகத் தலைமையகத்தில் நடந்த ஜாதி மறுப்பு - புரட்சிகர மணவிழா

கணவனை இழந்த இரண்டு குழந்தைகளுடன் வாழும் சித்ராவிற்கும்- ஹரிகிருஷ்ணனுக்கும் 25.04.22 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் தலைமை அலுவலகத்தில் சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் சுயமரியாதை திருமணம் நடைபெற்றது. இணையர் கழக வார ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு நன்கொடையாக 1000 ரூபாய் வழங்கினர்.

## நன்கொடை

திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா - திருப்பூர் மாநகர அமைப்பாளர் தனபால் இணையரின் மகள் பெரியார் பிஞ்சு யாழினி தனது சேமிப்புத் தொகையான ரூ.550-அய் தனது பிறந்தநாளையொட்டி 10.4.2022 அன்று ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு வளர்ச்சி நிதியாக வழங்கினார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.250
தொடர்புக்கு : ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 05th May 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN